தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2016–2018)

(பதினைந்தாவது பேரவை)

எட்டாவது அறிக்கை

"நகராட்சி நிருவாகம்"

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 5.7.2018)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2016–2018)

(பதினைந்தாவது பேரவை)



எட்டாவது அறிக்கை

"நகராட்சி நிருவாகம்" (நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) குறித்த மதிப்பீடு தொடர்பான குழுவின் அறிக்கை

11-74—1

பொருளடக்கம்

		பக்கம்
மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு	...	i
முன்னுரை	...	iii

பாகம் – 1 அறிக்கை

	முகவுரை	...	1
I.	நிர்வாக அமைப்பு	...	1
II.	விருதுநகர் நகராட்சியில் நடைபெறும் பூங்கா பணி	...	1–2
III.	மேலூர் நகராட்சி தினசரி மார்க்கெட் கட்டடம் அமைத்தல்	...	2
IV.	மதுரை – பாலமேடு டவுன் பஞ்சாயத்தில் உள்ள ஆதி திராவிடர் நல விடுதிக்கு தண்ணீர் இணைப்பு வழங்குதல்	...	2
V.	மதுரை – அய்யர் பங்களா மூன்று பகுதியில் சாலை அகலப்படுத்தும் பணி	...	3
VI.	கொடைக்கானல் நகராட்சியில் நவீன எரிவாயு தகனமேடை அமைத்தல்	...	3
VII.	வேடசந்தூர் பேரூராட்சிக்கு பேருந்து நிலையம் அமைத்தல்	...	4
VIII.	திண்டுக்கல் மாவட்டம் – நத்தம் கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள்	...	4–5
IX.	திருத்தணி நகராட்சியில் புதிய குடிநீர் திட்டம்	...	5–6
X.	திருத்தணி நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டுதல்	...	6
XI.	தூத்துக்குடி மாவட்டம் – அனைத்து அரசு அலுவலகங்களிலும் மழை நீர் சேமிப்புத் திட்டம்	...	6
XII.	திருநெல்வேலி மாவட்டம் – தென்காசி நகராட்சியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டுவது	...	7
XIII.	திருநெல்வேலி மாவட்ட நகராட்சிகளுக்கு பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் வாங்குதல்	...	7–8
XIV.	கீரனூர் பேரூராட்சியில் சாலை அமைத்தல்	...	8

XV.	மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்	...	8–9
XVI.	தாம்பரம் பேருந்து நிலையத்தின் எல்லையை வரையறை செய்தல்	...	9
XVII.	நாமக்கல்லில் சாலை அமைத்தல்	...	9
XVIII.	நாமக்கல்லில் கொசவம்பட்டி ஏரியினை சுற்றுலாத்தலமாக மாற்றியமைத்தல்	...	9–10
XIX.	வேலூர் மாவட்டம் – அணைக்கட்டு தொகுதி ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்துதல்	...	10
XX.	வேலூர் மாவட்டத்தில் கூட்டுக்குடிநீர் திட்டம்	...	10
XXI.	நூலக வரி நிலுவைத் தொகையினை தீர்வு செய்தல்	...	10

பாகம் – 2

நிகழ்ச்சிப் பகுதி	...	11–28
இணைப்பு		
இணைப்பு – I	...	29
பரிந்துரைகளின் சுருக்கம்	...	30–31
குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	...	32

மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு (2016–2018)

(2017–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது)
(2018 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாள்வரை நீட்டிக்கப்பட்டது)

தலைவர்

1. திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

#2. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்
துணை முதலமைச்சர் (அலுவல் காரணமாக)

3. திரு. கரி. இராமசாமி
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)

@4. திரு. விருகை V.N. ரவி
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)

5. திரு. எஸ்.ஆர். இராஜா
6. திரு. ஆர். கனகராஜ்
7. திரு. இரா. குமரகுரு
8. திரு. அர. சக்கரபாணி
9. திரு. கே.பி.பி. சாமி
10. திரு. எஸ். சுதர்சனம்
11. திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
12. திரு. தங்கம் தென்னரசு
13. திரு. ஏ.பி. நந்தகுமார்
14. டாக்டர் V.P.B. பரமசிவம்
15. திரு. கே.பி.பி. பாஸ்கர்
16. திருமதி ப. மனோன்மணி
17. திரு. வி.வி. ராஜன் செல்லப்பா
18. திரு. செ. ராஜேஷ் குமார்

**19. ..... வெற்றிடம்

செயலகம்

திரு. கி. சீனிவாசன் . . செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

திரு. சு. பாலகிருஷ்ணன் . . குழு அலுவலர் (பொ.க.கு)

 # 21.8.2017 முதல்
@ 19.3.2018 முதல்
*** 18.9.2017 முதல்*

முன்னுரை

2016–2018–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு 1.2.2017–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது. இக்குழுவில் 16 உறுப்பினர்கள் உள்ளனர். இது தவிர மாண்புமிகு துணை முதலமைச்சர், பொதுக் கணக்குக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் அலுவல் காரணமாக இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

2016–2018–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு, தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட ஐந்து மதிப்பீடுகளில், "நகராட்சி நிருவாகம்" பற்றிய மதிப்பீடும் ஒன்றாகும். முந்தைய மதிப்பீட்டுக் குழுக்களின் அறிக்கைகளில் உள்ள பரிந்துரைகளின் மீது துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை நேரில் ஆய்வு செய்வதற்கும், நிதித் துறையின் கருத்துருவான திட்டம் மற்றும் திட்டம் சாரா வகைப்பாட்டினை ஒன்றிணைப்பது குறித்து குழுவின் பின்ஏற்பு ஒப்புதல் பெறுவதற்காகவும், 2016–2017 ஆம் ஆண்டு மதிப்பீட்டுக் குழு தனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய மதிப்பீடுகள் குறித்து முடிவு செய்யவும் நீலகிரி மாவட்டத்தில் கூடியது. அதன்தொடர்ச்சியாக "நகராட்சி நிருவாகம்" குறித்த மதிப்பீட்டை கூர்ந்தாய்வு செய்வதற்காக குழு, தேனி, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், காஞ்சிபுரம், விருதுநகர் மற்றும் மதுரை ஆகிய 9 மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் கலந்துரையாடியது. 3.7.2018 அன்று சென்னையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் மற்றும் இதர துறை அலுவலர்களுடன் குழுவின் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இவ்வறிக்கைக்கு 4.7.2018 அன்று குழு ஒப்புதல் அளித்தது. "நகராட்சி நிருவாகம்" குறித்த குழுவின் அறிக்கை பின்வரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

குழுவின் சார்பாக அறிக்கையை சட்டமன்றப் பேரவைக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான், "நகராட்சி நிருவாகம்" குறித்த இந்த அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

"நகராட்சி நிருவாகம்" தொடர்பான மதிப்பீட்டினை ஆய்வு செய்வதற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் அளித்த நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அலுவலர்களுக்கு குழு தனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது. பார்வையிடுவதற்கு வசதியாக குழுவின் பரிந்துரைகள் பெரிய எழுத்துக்களில் (Bold) அச்சிடப்பட்டுள்ளன. இவ்வறிக்கையுடன் பரிந்துரைகளின் சுருக்கம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை – 600 009,
நாள்: 4.7.2018,
ஆனி 20,
திருவள்ளுவர் ஆண்டு, 2049.

பி.எம். நரசிம்மன்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

பாகம்–1 அறிக்கை

நகராட்சி நிருவாகம் குறித்த அறிக்கை

முகவுரை

தமிழ்நாடு, அதிவேகமான தொழில் வளர்ச்சி மற்றும் நகரமயமாதலில் வளர்ந்து வரும் மாநிலங்களில் ஒன்றாகும். அடுத்து வரும் 10 ஆண்டுகளில் தமிழ்நாடு இந்தியாவிலேயே நகர்ப்புற வளர்ச்சியில் ஒரு முன்னோடி மாநிலமாக தொடர்ந்து விளங்கும். பெருகிவரும் நகர்ப்புற மக்கள் தொகைக்கேற்ப அதிகரித்து வரும் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை அளிப்பதற்கு தேவையான கொள்கை முடிவுகள் மேற்கொள்வது மற்றும் மேலாண்மை உத்திகளை கையாளுவது பெரும் சவாலாக உள்ளது. இச்சவால்களை எதிர்கொள்ள, சேவைகள், திறன் மேம்பாடுகள், உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்குத் தேவையான நிதி ஆதாரங்களை திரட்டுதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு உகந்த தொழில்நுட்ப உத்திகளை கடைபிடித்தல் ஆகியவை தீர்வாக அமைந்துள்ளன.

I. நிர்வாக அமைப்பு

1. நகராட்சி நிர்வாக ஆணையரகம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை தலைமையாகவும் மற்றும் இணை ஆணையர்கள், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர் மற்றும் ஏழு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களைக் கொண்டுள்ளது. சென்னை மாநகராட்சி தவிர, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிட்டு கண்காணிப்பது இவ்வலுவலகத்தின் பணியாகும். தமிழ்நாட்டில் 11 மாநகராட்சிகள் மற்றும் 124 நகராட்சிகள், நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. நகராட்சி நிருவாக அமைப்பினை காட்டும் விளக்கப்படம் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு–1)

II. விருதுநகர் நகராட்சியில் நடைபெறும் பூங்கா பணி

2. குழு, விருதுநகர் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது விருதுநகர் நகராட்சியில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் பூங்கா பணிகளை குழு பார்வையிட்டது. அப்போது அப்பூங்காவில் நடைபெறும் பணிகள் குறித்து குழு அறிய விரும்பியது. பூங்கா அமைக்கும் பணியின் தாமதத்திற்கான காரணம் மற்றும் அதன் தற்போதைய நிலை குறித்தும் குழு அறிய விரும்பியது.

3. குழு கோரியதற்கு, ரூ.77,48,244/–வரை செலவினம் மேற்கொள்ளப்பட்டது என்றும், ஒப்பந்ததாரர் பணியினை மேற்கொள்ள காலதாமதம் செய்ததால், பணி முடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. ஒப்பந்ததாரருக்கு பலமுறை நினைவூட்டுக் கடிதம் மற்றும் குறிப்பாணைகள் வழங்கப்பட்டு புல்வெளி அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. அனைத்து பணிகளும் 31.08.2018–க்குள் முடிக்கப்பட்டு பூங்கா பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்று துறையால் தெரிவிக்கப்பட்டது.

4. துறையால் தெரிவிக்கப்பட்ட கருத்திற்கு குழு பார்வையிடும் போது, அங்கு நடைபெற்ற பணிகள் மிகவும் மோசமான நிலையில் இருந்ததை குழு நேரில் காண முடிந்தது. துறையின் அலுவலர்கள் திட்டம் குறித்த சரியான தகவலை குழுவிற்கு தெரிவிக்கவில்லை என்பது குழுவின் கருத்தாகும்.

5. குழுவின் கருத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் பணி முடிப்பதற்கு குறிப்பிட்ட கால வரையரை இருக்கும். அதன் பிறகு கால நீட்டிப்பு (Extension of Time) கொடுக்கலாம். 90 சதவீத ஒப்பந்தப் பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்ட பின்னர் தான் பணி நிறைவடையும். அவ்வாறு கால நீட்டிப்பு வழங்கப்பட்ட பின்பும், பணி முடிக்காத நேர்வில் அபராதம் விதிக்கப்படும் என்றும் தெரிவித்தார். எனவே, நடைபெறும் பணி அபராதம் விதிக்கும் அளவில் இல்லை என்று தெரிவித்தார். மேலும், துறையின் அரசு முதன்மைச் செயலாளர் ஒப்பந்ததாரர் காலதாமதம் செய்தால், நிர்ணயித்த ஒப்பந்தப் புள்ளியை கூடுதலான தொகையில் (Escalation of Cost) பணி மேற்கொள்ள வேண்டியதாக இருக்கும். பணி இன்னும் இரண்டு மாதங்களில் முடியும் என்றும் தெரிவித்தார்.

6. நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்தது போல், அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

III. மேலூர் நகராட்சி தினசரி மார்க்கெட் கட்டடம் அமைத்தல்

7. மதுரை மாவட்டம் மேலூர் நகராட்சி தினசரி மார்க்கெட் கட்டடம் கட்ட 2015–ஆம் ஆண்டு ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் கருத்துரு அனுப்பப்பட்டது. திருந்திய மதிப்பீடு ரூ.5.00 கோடிக்கான கருத்துரு அனுப்பப்பட உள்ளது என தெரிவிக்கப்பட்டது. இது குறித்த தகவலை குழுவிற்கு தெரிவிக்கவும்.

8. தொழில்நுட்ப ஆலோசகர் மூலம் தினசரி அங்காடி கட்டடம் கட்ட ரூ.5.00 கோடிக்கான திருத்திய கருத்துரு தயார் செய்யப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளது. நிதி ஆதாரம் பெற நடவடிக்கையில் உள்ளது என்று துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. துறையால் தெரிவிக்கப்பட்டுள்ள திருத்திய கருத்துருவிற்கு ஒப்புதல் அளித்து, உரிய நிதியினை பெற துறை நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

IV. மதுரை – பாலமேடு டவுன் பஞ்சாயத்தில் உள்ள ஆதி திராவிடர் நல விடுதிக்கு தண்ணீர் இணைப்பு வழங்குதல்

10. குழு, மதுரை மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்ட போது பாலமேடு டவுன் பஞ்சாயத்திலுள்ள ஆதி திராவிடர் நலவிடுதிக்கு தண்ணீர் இணைப்பு விரைவாக வழங்க வேண்டும் என குழு கருத்து தெரிவித்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

11. பாலமேடு பேரூராட்சிக்குட்பட்ட 1–வது வார்டு வலையப்பட்டி ரோடு பகுதியில் அமைந்துள்ள ஆதி திராவிடர் நலவிடுதிக்கு குடிநீர்குழாய் இணைப்பு அளிக்கும் பணி நடைபெற்று வருகிறது. 05.07.2018–க்குள் பணி முடிவடையவுள்ளது என்று துறையால் தெரிவிக்கப்பட்டது.

12. ஆதி திராவிடர் நலவிடுதிக்கு குறித்த காலத்திற்குள் குடிநீர் வழங்குவதற்கான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்து அறிக்கை ஒன்றினையும் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

V. மதுரை – அய்யர் பங்களா மூன்று பகுதியில் சாலை அகலப்படுத்தும் பணி

13. மதுரை மாநகராட்சி ரூ.24.36 கோடி மதிப்பீட்டில் அய்யர் பங்களாவில் உள்ள மூன்று பகுதியில் சாலை அகலப்படுத்தும் பணி விவரம், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

14. மதுரை அழகர்கோவில் சாலை – நத்தம் சாலையை இணைக்கக் கூடிய மூன்று மாவடி – அய்யர்பங்களா சாலையினை விரிவுபடுத்தி தடுப்புச்சுவர் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியின் (Infrastructure and Amenities Development Fund) கீழ் மேற்கொள்ள அரசின் நிர்வாக ஒப்புதல் வரப்பெற்றுள்ளது. மேலும் சாலையின் நடுவே வாய்க்கால் அமைக்கும் பணி ரூ.18.38 கோடி மதிப்பீட்டில் பொதுப் பணித்துறையினரால் மேற்கொள்ள கடிதம் வைக்கப்பட்டுள்ளது. தற்போது சாலை அகலப்படுத்தும் பணிக்கு ரூ.5.30 கோடி மதிப்பீட்டில் தொழில்நுட்ப ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கையில் உள்ளது. ஒப்புதல் வரப்பெற்ற பின்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்று துறையால் தெரிவிக்கப்பட்டது.

15. குழு, பொதுமக்களின் நலன் கருதி துறை மேற்படி அனைத்து பணிகளை குறித்த காலத்திற்குள் முடிக்கப்படவேண்டும் என்று பரிந்துரை செய்கிறது.

VI. கொடைக்கானல் நகராட்சியில் நவீன எரிவாயு தகனமேடை அமைத்தல்

16. கொடைக்கானல் நகராட்சியில் நவீன எரிவாயு தகனமேடை, நவீன இறைச்சி கூடம் அமைப்பதற்கான கருத்துருக்களின் மீது துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

17. கொடைக்கானல் நகராட்சியில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிக்கு மூலதன மானில நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி 2017–2018–இன் கீழ் ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 14.06.2018–இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது என்றும், கொடைக்கானல் நகராட்சியில் இறைச்சி கூடம் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பிரேரணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் துறையால் தெரிவிக்கப்பட்டது.

18. கொடைக்கானல் நகராட்சியில் நவீன எரிவாயு தகனமேடை அமைப்பதற்கான நிர்வாக அனுமதி 14.06.2018 அன்று வழங்கப்பட்டுள்ள நிலையில் துறை அனைத்து பணிகளையும், குறித்த காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. கொடைக்கானல் நகராட்சி நவீன இறைச்சிக் கூடம் அமைப்பதற்கான பிரேரணை மீது ஒப்புதல் பெற்று நவீன இறைச்சிக் கூடம் அமைக்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

VII. வேடசந்தூர் பேரூராட்சிக்கு பேருந்து நிலையம் அமைத்தல்

19. குழு, திண்டுக்கல் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்ட போது, வேடசந்தூர் பேருந்து நிலையக் கட்டடம் சிறியதாக உள்ளதால் பேருந்து நிலையத்திற்கு பின்னால் உள்ள மின்சார வாரியத்தின் இடத்தை மாற்றம் செய்து தர வேண்டும் என குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இது தொடர்பாக துறையிடம் ஏதேனும் கருத்துரு வரப்பெற்றுள்ளதா என குழு அறிய விரும்பியது.

20. திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் பேரூராட்சி 12,440 மக்கள் தொகை கொண்ட தோ்வுநிலை பேரூராட்சியாகும். இப்பேரூராட்சிக்குட்பட்ட புல எண்–1972/3–இல் சுமார் 63 சென்ட் விஸ்தீரணத்தில், நாள் ஒன்றுக்கு சுமார் 250 பேருந்துகள் வந்துசெல்லும் பேருந்து நிலையம், நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. இப்பேரூராட்சிக்கு அதிக அளவில் பொதுமக்கள் வந்துசெல்வதாலும், வளர்ந்து வரும் நகரின் தேவைக்கேற்ப பேருந்துகள் அதிகளவில் இயக்கப்படுவதாலும், தற்போதுள்ள பேருந்து நிலையம் போதுமானதாக இல்லை. பேருந்து நிலையத்திற்கு மிக அருகில் உள்ள புல எண்–1972/2 மொத்த விஸ்தீரணம் 0.43.50 ஹெக்டர் அளவுள்ள நிலம் வருவாய்த்துறை ஆவணங்களின்படி மின்வாரியம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்று துறையால் தெரிவிக்கப்பட்டது.

21. மேலும், அவ்விடத்தில் செயல்பட்டு வரும் மின்வாரியம் வெகுநாட்களுக்கு முன்னர் கட்டப்பட்ட பழைய கட்டடத்திலும், போதிய பாராமரிப்பின்றி முட்புதர்கள் அதிகளவு வளர்ந்த காடுபோல் உள்ளது. இவ்விடத்தை பேருந்து நிலைய விஸ்தரிப்பிற்கு எடுத்துக்கொண்டு இதற்கு மாற்றாக மின்வாரிய கட்டடத்திற்கு இதே முக்கிய சாலையில் வேடசந்தூர் வட்டாட்சியர் அலுவலகம் எதிரே உள்ள புல எண்–1924/3–இல் மொத்த விஸ்தீரணம் 0.04.0 ஹெக்டேர் நிலம் அரசு மருத்துவமனை பெயரிலும், இதற்கு அருகாமையில் உள்ள புல எண்–1924/4 மொத்த விஸ்தீரணம் 0.16.0 ஹெக்டேர் நிலம் சுகாதார நிலையம் எனவும், வருவாய்த்துறை ஆவணங்களின்படி உள்ள இடம், பரிசீலிக்கப்பட்டது. இச்சுகாதார நிலைய இடத்தினை மின்வாரியத்திற்கு ஒப்படைப்பு செய்யும் பட்சத்தில், மின்வாரிய இடத்தினை பெற்று வேடசந்தூர் பேருந்து நிலையத்தினை விஸ்தரிப்பு செய்ய இயலும். ஏனெனில் அரசு மருத்துவமனைக்கென தனியாக வேடசந்தூர்–வடமதுரை சாலையில் புல எண்–670/2–இல், புதிய அரசு மருத்துவமனை கட்டடம் 1 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டு, போதிய வசதிகளுடன் நல்லநிலையில் செயல்பட்டு வருகிறது என்று துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

22. வேடசந்தூர் பேரூராட்சியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தினை விரிவுப்படுத்த தேவையான நிலத்தினை பெறுவதற்கு துறை அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

VIII. திண்டுக்கல் மாவட்டம் – நத்தம் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள்

23. குழு, திண்டுக்கல் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, நத்தம் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், இத்திட்டத்தின் மூலமாக பழனி, தொப்பம்பட்டி உள்ளிட்டப் பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், ஒட்டன்சத்திரத்திற்கு நத்தம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழும் பழனி, தொப்பம்பட்டிக்கு திருமூர்த்தி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழும் குடிநீர் வழங்கினால் அடுத்த 50 ஆண்டுகளுக்கு தண்ணீர் பிரச்சனை இருக்காது என குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இது குறித்து துறையின் பதிலை குழு அறிய விரும்பியது.

24. காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு தற்போது செயலாக்கத்தில் இருக்கும் நத்தம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்தை சார்ந்த 258 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர் மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இதில் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த குடிநீர் பற்றாக்குறை உள்ள 63 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க உட்கட்டமைப்பு பணிகளுக்காக ரூ 16.75 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்று துறையால் தெரிவிக்கப்பட்டது.

25. திண்டுக்கல் மாவட்டத்திற்குட்பட்ட தொப்பம்பட்டி (218) மற்றும் பழனி (136) ஊராட்சி ஒன்றியங்களில் 354 குடியிருப்புகள் உள்ளன. இவற்றுள் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட வேடசந்தூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 101 குடியிருப்புகளுக்கு ரூ.4.12 கோடி மதிப்பீட்டில் 43,000 மக்கள் பயன்பெறும் வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும் துறையால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

26. அதே போல் எஞ்சிய 253 குடியிருப்புகளுக்கு திண்டுக்கல் மாவட்டம், கீரனூர், நெய்க்காரன்பட்டி பேரூராட்சிகள் மற்றும் பழனி (136) மற்றும் தொப்பம்பட்டி (117) ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 253 குடியிருப்புகளுக்கு தற்போது செயலாக்கப் பணிகள் நடைபெற்று வரும் நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நாளொன்றுக்கு 15.76 மில்லியன் லிட்டர் குடிநீர் மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு அரசாணை எண்.13 / நநி ம குவ(குநி1). நாள் 10.02.2017–இன்படி ரூ.108.80 கோடிக்கு தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பணி உத்தரவு 17.05.2018–இல் வழங்கப்பட்டு தற்போது, பணிகள் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 117 குடியிருப்புகளும், பழனி ஒன்றியத்திற்கு உட்பட்ட 18 குடியிருப்புகளும், பழனி தொகுதிக்குட்பட்ட பழனி ஊராட்சி ஒன்றியத்தில் 118 குடியிருப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டங்கள் நிறைவேறும் பொழுது, தொப்பம்பட்டி மற்றும் பழனி ஊராட்சி ஒன்றியங்கள் முழுமையாக பயன்பெறும் என்றும் துறையால் தெரிவிக்கப்பட்டது.

27. எனவே, மாற்று நீராதாரம் மூலம் (அதாவது திருமூர்த்தி அணையிலிருந்து) மேற்குறிப்பிட்ட கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்த அவசியம் எழவில்லை என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது இருப்பினும், எதிர்காலத்தில் தேவையின் அடிப்படையில் நிதிநிலைக்கேற்ப திருமூர்த்தி அணை நீராதாரத்தைக் கொண்டு புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் ஆய்வு செய்திட பரிசீலிக்கப்படும் என்றும் துறையால் தெரிவிக்கப்பட்டது.

28. மேற்படி, பணிக்கான அனைத்துப் பணிகளும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படவேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

IX. திருத்தணி நகராட்சியில் புதிய குடிநீர் திட்டம்

29. குழு, திருவள்ளூர் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்ட போது, திருத்தணியில் அருள்மிகு சுப்புரமணிய சுவாமி திருக்கோயில் உள்ளதால் தினந்தோறும் ஏறத்தாழ 30,000 மக்கள் வந்து செல்கிறார்கள். ஆனால் நிரந்தரமான குடிநீர் வசதி இல்லை என குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. திருத்தணி நகராட்சியில் புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்தபட வேண்டும் என குழு கருத்து தெரிவித்தது. இது குறித்து துறையின் பதிலை அறிய விரும்பியது.

30. திருத்தணி நகராட்சியில் புதிய குடிநீர் திட்டத்திற்கான திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தொழில் நுட்பக் குழுவின் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையகரத்திற்கு நிதியாதாரம் வேண்டி அனுப்பப்பட்டுள்ளது. தற்பொழுது, நகராட்சி நிர்வாக ஆணையர் ஆலோசனைக்கு ஏற்ப திட்டமதிப்பீடு ரூ.110.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் நிதியாதாரம் இறுதி செய்யப்பட்டு அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டபின் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும் என்று துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

31. திருத்தணி நகராட்சியில் புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்த துறை அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

X. திருத்தணி நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டுதல்

32. திருத்தணி நகராட்சி புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கான கருத்துருக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

33. திருத்தணி நகராட்சியில் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நிதி ஒதுக்கீடு செய்து தரக் கோரி நகராட்சி ஆணையர் கடிதம் ந.க.எண்.925/2017/இ1 நாள்.09.05.2018-ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5, அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் கடிதம் ந.க.எண்.3530/2018/TP3 நாள்.09.05.2018-ல் திருத்தணி நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்து தரக் கோரி ஆணையர், நகர் மற்றும் ஊரமைப்பு துறை, சென்னை-5 அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று துறையால் தெரிவிக்கப்பட்டது.

34. பொது மக்களின் நலன் கருதி திருத்தணி நகராட்சிக்குப் பேருந்து நிலையம் அமைப்பது மிக முக்கியமான பணி என்பதால், துறையால் பேருந்து நிலையம் அமைப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளப்படவேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XI. தூத்துக்குடி மாவட்டம் – அனைத்து அரசு அலுவலகங்களிலும் மழை நீர் சேமிப்புத் திட்டம்

35. குழு, தூத்துக்குடி மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்ட போது, அனைத்து அரசு அலுவலகங்களிலும் மழை நீர் சேமிப்புத் திட்டத்தை முழுமையாக செயல்படுத்தவும், புதியதாக கட்டப்படும் கட்டடங்களிலும் முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்றும், செயல்படுத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு தனது கருத்தினை தெரிவித்து, இது குறித்து துறை எடுத்த நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

36. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 19 பேரூராட்சி பகுதிகளில் 780 அரசு கட்டடங்கள் உள்ளன. குழு வருகை புரியும் போது 753 கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பு தொட்டிகள் அமைக்கப்பட்டிருந்தது. அதன் பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மீதமுள்ள 27 கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்பு தொட்டிகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், புதியதாக கட்டப்படும் கட்டடங்களிலும் கட்டட அனுமதி வழங்கும் போதே. மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்திட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலே அனுமதி வழங்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது என்று துறையால் தெரிவிக்கப்பட்டது.

37. தமிழ்நாடு முழுவதும் புதிய அரசு கட்டடங்கள் கட்டும் போது மழைநீர் சேகரிப்பு தொட்டிகளை ஏற்படுத்திட நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XII. திருநெல்வேலி மாவட்டம் – தென்காசி நகராட்சியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டுவது

38. தென்காசி நகராட்சியில் 2 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டுவதற்கான கருத்துருவின் மீது துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

39. குடிநீர் விநியோக அபிவிருத்தி பணிகளுக்கு விரிவான திட்ட மதிப்பீடு ரூ.44.43 கோடியில் தயார் செய்யப்பட்டு சென்னை, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படைவசதி மேம்பாட்டு (TUFIDCO) நிறுவனத்தில் 19.06.2018 அன்று மதிப்பாய்தல் கூட்டம் நடைபெற்றதில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) மூலம் பொறியாளர்களுடன் திட்டம் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டு மதிப்பீடு திருத்தம் செய்ய அறிவுரை வழங்கப்பட்டது. அதனடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) மூலம் திருத்திய மதிப்பீடு சமர்ப்பிக்க நடவடிக்கையில் உள்ளது என்று துறையால் தெரிவிக்கப்பட்டது.

40. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) மூலம் திருத்திய மதிப்பீடு பெற்று அனைத்து பணிகளையும் குறித்த காலத்திற்குள் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XIII. திருநெல்வேலி மாவட்ட நகராட்சிகளுக்கு பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் வாங்குதல்

41. திருநெல்வேலி மாவட்டத்தின் 7 நகராட்சிகளுக்கு பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் வாங்குவது தொடர்பாக, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

42. தென்காசி நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் 20 எண்ணம் ரூ.36.50 லட்சம் மதிப்பீட்டுத் தொகையில் வாங்க திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று துறையால் தெரிவிக்கப்பட்டது.

43. மேலும், செங்கோட்டை நகராட்சியில் எஸ்.பி.ஐ வங்கி மூலமாக 1 எண்ணம் பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் 14 எண்ணம் பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டில் வாங்க திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், துறையால் தெரிவிக்கப்பட்டது.

44. கடையநல்லூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் 5 எண்ணம் வாங்குவதற்கு நகராட்சி பொதுநிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கையில் உள்ளது. மேலும், நகராட்சி பகுதியில் அமைக்கப்படவுள்ள 6 எண்ணம் நுண்ணுரம் தயாரிக்கும் நிலையம் (MCC) க்கு 36 எண்ணம் பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் வாங்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு திட்ட பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது என்றும், துறையால் தெரிவிக்கப்பட்டது.

45. புளியங்குடி நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் 2 எண்ணம் வாங்கப்பட்டுள்ளது. மேலும், 20 எண்ணம் ரூ.49.50 லட்சம் மதிப்பீட்டுத் தொகையில் வாங்க திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், துறையால் தெரிவிக்கப்பட்டது.

46. புளியங்குடி நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் 2 எண்ணம் வாங்கப்பட்டுள்ளது. மேலும், 20 எண்ணம் ரூ.49.50 லட்சம் மதிப்பீட்டுத் தொகையில் வாங்க திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், துறையால் தெரிவிக்கப்பட்டது.

47. சங்கரன்கோவில் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் 13 எண்ணம் ரூ.23.40 லட்சம் மதிப்பீட்டுத் தொகையில் வாங்க திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், துறையால் தெரிவிக்கப்பட்டது.

48. அம்பாசமுத்திரம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் 5 எண்ணம் ரூ.9.00 லட்சம் மதிப்பீட்டுத் தொகையில் வாங்க திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், துறையால் தெரிவிக்கப்பட்டது.

49. விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் 25 எண்ணம் ரூ.45.00 லட்சம் மதிப்பீட்டுத் தொகையில் வாங்க திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், துறையால் தெரிவிக்கப்பட்டது.

50. குழு, கோரியதற்கு துறை, தென்காசி, செங்கோட்டை, கடையநல்லூர், புளியங்குடி, சங்கரன்கோவில், அம்பாசமுத்திரம் மற்றும் விக்கிரமசிங்கபுரம் நகராட்சிகளுக்கு திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் வாங்குவதற்கான கருத்துருவிற்கு அரசின் ஒப்புதல் பெற்று வாங்கப்பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XIV. கீரனூர் பேரூராட்சியில் சாலை அமைத்தல்

51. திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் தொகுதியில் கீரனூர் பேரூராட்சியில் எந்தந்த சாலைப் பணிகள் நடைபெறுகிறது என்கிற விவரம் குறித்து குழுவிற்கு தெரிவிக்கவும்.

52. இயக்குநர், பேரூராட்சி வேடசந்தூர் தொகுதியில் கீரனூர் பேரூராட்சியில் எந்தந்த சாலைப் பணிகள் நடைபெறுகிறது என்கிற விவரம் தற்போது துறையிடம் இல்லை என பேரூராட்சி இயக்குநர் தெரிவித்தார்.

53. கீரனூர் பேரூராட்சியில் சாலை அமைத்து கொடுக்க வேண்டும் என்று துறைக்கு குழு பரிந்துரை செய்கிறது. மேலும், பணி மேற்கொண்ட பிறகு அது தொடர்பான அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XV. மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்

54. தமிழ்நாடு முழுவதும் எந்தெந்த பகுதியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பழுதடைந்த நிலையில் உள்ளதோ, அவற்றை கண்டறிந்து அதனை அகற்றி, அதற்கு மாற்றாக, புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டுதல் குறித்து குழு துறைக்கு அறிவுரை வழங்கியது.

55. ஆணையர் நகராட்சி நிர்வாகம் குழுவின் கருத்தினை ஏற்று இது குறித்து ஆய்வினை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

56. தமிழ்நாடு அளவில் எங்கெங்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் பழுதடைந்துள்ளது என துறை கணக்கெடுத்து, அதற்கு மாற்றாக புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்படுவதற்கான நிதியினையும் அந்தப் பணிகளை படிப்படியாக நிறைவேற்றிடவும் குழு பரிந்துரை செய்கிறது.

XVI. தாம்பரம் பேருந்து நிலையத்தின் எல்லையை வரையறை செய்தல்

57. தாம்பரம் பேருந்து நிலையத்தில் இடையூராக உள்ள அமைப்புகளை அகற்ற வேண்டும் என குழுவின் சார்பாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

58. நகராட்சி ஆணையர் இது குறித்து ஒரு வார காலத்தில் ஆய்வினை மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

59. தாம்பரம் பேருந்து நிலையம் எல்லையை வரையறுத்து அங்கு இடையூராக உள்ள கடைகளை அகற்றி, முழு எல்லையில் பேருந்து நிலையம் செயல்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XVII. நாமக்கல்லில் சாலை அமைத்தல்

60. நாமக்கல் நகராட்சியில் ரிங்ரோடிலிருந்து புதிய பேருந்து நிலையத்திற்கு செல்லும் சாலையினை அகலப்படுத்த வேண்டும் என்று குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

61. பொது மக்களின் நலன் கருதி அச்சாலையினை அமைத்து தர உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள துறைக்கு குழு பரிந்துரை செய்கிறது.

XVIII. நாமக்கல்லில் கொசவம்பட்டி ஏரியினை சுற்றுலாத்தலமாக மாற்றியமைத்தல்

62. நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 26 ஏக்கர் பரப்பளவு கொண்ட கொசவம்பட்டி ஏரியினை சுத்தம் செய்து, அதன் கரைப்பகுதிகளை வலுப்படுத்தி, சுற்றுப்புறத்தை அழகுபடுத்தி அப்பகுதியினை சுற்றுலாத்தலமாக மாற்றியமைக்க, குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

63. குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டதால் நாமக்கல் நகராட்சியில் அமைந்துள்ள கொசவம்பட்டி ஏரியினை சுத்தம் செய்து அதன் கரைப்பகுதிகளை வலுப்படுத்தி, சுற்றுப்புறங்களை அழகுப்படுத்தி, அப்பகுதியினை சுற்றுலாத்தலமாக மாற்றியமைக்க சுற்றுலா துறையுடன் இணைத்து அக்கருத்துருவினை பரிசீலித்து துறை உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XIX. வேலூர் மாவட்டம் – அணைக்கட்டு தொகுதி ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்துதல்

64. வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தொகுதி ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்தி தர வேண்டும் என குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

65. குழுவிடம் வைக்கப்பட்ட கோரிக்கையினை துறை பரிசீலித்து தரம் உயர்த்த உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XX. வேலூர் மாவட்டத்தில் கூட்டுக் குடிநீர் திட்டம்

66. வேலூர் மாவட்டத்தில் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் முறையாக இல்லை என குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

67. வேலூர் மாவட்டத்தில் செயல்படும் கூட்டுக் குடிநீர் திட்டத்தினை நல்ல முறையில் ஆய்வு செய்து, அதில் உள்ள இடர்பாடுகளை நீக்கி, குடிதண்ணீர் விநியோகம் சீராக வழங்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XXI. நூலக வரி நிலுவைத் தொகையினை தீர்வு செய்தல்

68. உள்ளாட்சியமைப்புகளில் இருந்து, நூலகத் துறைக்கு மாற்றம் செய்ய வேண்டிய நூலக வரியினை தீர்வு செய்யுமாறு, குழு ஆய்வு பயணம் மேற்கொண்ட மாவட்டங்களில் குழுவிற்கு கோரிக்கையாக வைக்கப்பட்டது. இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

69. குழு கோரியதற்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர் நிலுவைத் தொகையினை தீர்வு செய்வதாக குழுவிற்கு உறுதியளித்தார்.

70. உள்ளாட்சி அமைப்புகளில் இருந்து நூலகத் துறைக்கு மாற்றம் செய்ய வேண்டிய நூலக வரியினை தீர்வு செய்வது குறித்து அதிவிரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

சென்னை – 600 009,
நாள் : 4.7.2018,
ஆனி 20,
திருவள்ளுவர் ஆண்டு 2049.

பி.எம். நரசிம்மன்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

பாகம்–2

நிகழ்ச்சி பகுதி

துன்முகி, பங்குனி 10 – திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 மார்ச் 23, வியாழக்கிழமை

பதினைந்தாவது பேரவையின் 2016–2017 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் குழுக்களான மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு ஆகியவைகளின் தொடக்கக் கூட்டம் 2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள், வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் சென்னை–9, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வளாகத்தில் உள்ள குழுக் கூட்ட அறையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர், மதிப்பீட்டுக் குழுத் தலைவர், பொதுக் கணக்குக் குழுத் தலைவர், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் மற்றும் மாநில கணக்காய்வுத் தலைவர் (பொது மற்றும் சமூகப் பிரிவு தணிக்கை) மாநில துணை கணக்காய்வுத் தலைவர் (பொருளாதாரம் மற்றும் வருவாய் பிரிவு தணிக்கை) ஆகியோர் கலந்து கொண்டனர்.

அக்கூட்டத்தில் மதிப்பீட்டுக் குழு சார்பில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. ஆர். கனகராஜ்
திரு. இரா. குமரகுரு
திரு. அர. சக்கரபாணி
திரு. எஸ். சுதர்சனம்
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
திரு. தங்கம் தென்னரசு
திரு. ஏ.பி. நந்தகுமார்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி
திரு. செ. ராஜேஷ் குமார்
திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்	..	செயலாளர்
திருமதி இரா. சாந்தி	..	இணைச் செயலாளர்
